# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. S.T.C - 594/2023**

**Deposition of Witness for Prosecution : D.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | Caste | : |
| Father/Husband Name | : சுப்பிரமணியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Both Parties Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.02.2025.**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் எதிரியாவேன். நான் ஒப்பந்த வேலை எடுத்து செய்து வருகிறேன். நான் புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை. அந்த சமயத்தில் நான் தமிழ்நாட்டிலே இல்லை. எனக்கு புகார்தாரர் யார் என்றே தெரியாது. நான் அவரை பார்த்ததே இல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 18.04.2023 **ஆம் தேதியில் வழக்கறிஞர் ரமேஷ்பாபு** எனக்கு **அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் அதன் அஞ்சல் உறை** என்றால் சரிதான். அந்த ஆவணம் **எ.சா.ஆ**. 1ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு நான் எனது வழக்கறிஞரின் மூலம 04.05.2023 **ஆம் தேதியில் வழக்கறிஞர் ரமேஷ்பாபுவிற்கு பதில் அறிவிப்பு** அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பு **எ.சா.ஆ**. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் 21.06.2023ம் தேதியில் புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் எனக்கு ம.சா.ஆ4 சட்ட அறிவிப்பை அனுப்பினார். அதற்கு நான் 02.07.2023ம் தேதி பதில் அறிவிப்பு ம.சா.ஆ 6ஐ அனுப்பினேன். 18.11.2024 **ஆம் தேதியில்** என்னுடைய South Indian Bank **வங்கி**

**கணக்கின் கணக்கு அறிக்கை பதிவிறக்க செய்யப்பட்ட நகல் எ.சா.ஆ**. 3 (**ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**). நான் 27.01.2023 முதல் ஜீன் 2023 வரை கேரளாவில் கோழிக்கோடு மாவட்டத்தில் துணை ஒப்பந்தந்தாராக வேலை பார்த்து வந்தேன். அதற்கு 10.07.2023 **ஆம் தேதியில்** HDPE & Cable Contractor எனக்கு **கொடுத்த உறுதி கடிதத்தின் அசல் எ.சா.ஆ**. 4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**). நான் புகார்தாரரிடமிருந்து எந்த பணமும் பெறவில்லை. எனவே புகார்தாரரின் மனுவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**(புகார்தாரரின ் வழக்கறிஞா ் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**